# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
## Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons), District Munsif, Arni.
## O.S.9/2024

2026=ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| **Deposition of Witness for** | | **PW 1** | | |
|---|---|---|---|---|
| பெயர் | ° | சின்னதுரை | தொழில் | ° | கூலி |
| தந்தை பெயர் | ° | பெரியண்ண கவுண்டர் | வயது | ° | 75 |
| கிராமம் | ° | அடையபுலம் | | ° | |
| தாலுக்கா | ° | ஆரணி | | ° | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.02.2026. நேரம் - 4.05**

சாட்சியின் அடையாளம் - ஆதார் அட்டையின் மூலம் அடையாளம் காணப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் மேற்படி கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன்,

ஆவணங்கள்

1. 07.01.2021 அன்று என் பெயருக்கு கோவிந்தசாமி எனக்கு எழுதிக் கொடுத்த கடனுறுதி சீட்டு அசல் **வா.சா.ஆ.1** ஆகவும்,

2. 07.08.2023 அன்று நான் வழக்கறிஞர் மூலம் கோவிந்தசாமிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்,

3. மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.3** ஆகவும்,

4. 21.12.2023 அன்று 1ம் பிரதிவாதிக்கு நான் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.4** ஆகவும்,

5, 21.12.2023 அன்று 2ம் பிரதிவாதிக்கு நான் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.5** ஆகவும்,

6. 21.12.2023 அன்று 3ம் பிரதிவாதிக்கு நான் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு செய்யாமல் திருப்பப்பட்ட அஞ் **வா.சா.ஆ.6** ஆகவும்,

7. மேற்படி அறிவிப்பை 1ம் பிரதிவாதிக்கு அனுப்பியதற்கான இணைய வழி அஞ்சல் ரசீது **வா.சா.ஆ.7** ஆகவும்,

8. மேற்படி அறிவிப்பை 2ம் பிரதிவாதிக்கு அனுப்பியதற்கான இணைய வழி அஞ்சல் ரசீது **வா.சா.ஆ.8** ஆகவும்,

9. மேற்படி அறிவிப்பை 3ம் பிரதிவாதிக்கு அனுப்பியதற்கான இணைய வழி அஞ்சல் ரசீது **வா.சா.ஆ.9** ஆகவும்,

10.கோவிந்தசாமியின் இறப்பு சான்று கணினி நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**நேரம் - 4.20**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni